பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

31 05 2025 **SATURDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. பெண்கள் தலைமையிலான முன்னேற்றம் நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளமாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. இந்தியா – அமெரிக்கா இடையிலான இருதரப்பு உறவுகள் குறித்து வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி இன்று வாஷிங்டனில் அந்நாட்டு தலைவர்களுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

3. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது பாகிஸ்தானில் ஏற்பட்ட உயிரிழப்புக்கு தெரிவித்திருந்த இரங்கலை கொலம்பியா அதிகாரப்பூர்வமாக திரும்பப்பெற்றுள்ளது.

4. மூவர்ண கொடி ஏந்திய **Fit India** சிறப்பு சைக்கிள் பேரணி நாளை புதுதில்லியில் தொடங்குகிறது.

5. ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் எட்டு தங்கம், 10 வெள்ளி, ஆறு வெண்கலம் என மொத்தம் 24 பதக்கங்களுடன் இந்தியா பதக்கப்பட்டியலில் இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது.

இனி விரிவான செய்திகள்--

**<<<<<<>>>>>>**

பெண்கள் தலைமையிலான முன்னேற்றம் நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளமாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

லோக் மாதா தேவி அஹில்யாபாயின் 300-ஆவது ஜெயந்தியையொட்டி, ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் மகா சம்மேளன் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், பஹல்காம் தாக்குதலில் மகளிர் சக்திக்கு எதிராக தீவிரவாதிகள் விடுத்த சவாலுக்கு தக்க பதிலடி தரப்பட்டதாகவும் கூறினார்.

மத்தியப்பிரதேச மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் மக்கள் நலத்திட்டங்கள் குறித்து பேசிய பிரதமர், தேவி அஹில்யா பாயின் மகளிர் முன்னேற்றத்திற்கான சிந்தனைகளை அடிப்படையாக கொண்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறினார்.

மகளிர் தலைமையிலான முன்னேற்றம் நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைகிறது என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

அரசு எடுக்கும் ஒவ்வொரு முக்கிய முயற்சியிலும் மகளிர் இருப்பதாக அவர் கூறினார்.

அனைத்துத்துறைகளிலும் மகளிரின் பங்களிப்பை உறுதி செய்ய வேண்டும் என்ற குறிக்கோளுடன் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக கூறிய அவர், வேளாண்மை, தொழில்நுட்பம் உள்ளிட்ட அனைத்துத்துறைகளிலும் மகளிர் சிறப்பாக செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

வேளாண் துறையில் உற்பத்தியை பெருக்குவதற்கு கொண்டுவரப்பட்ட ட்ரோன் திட்டத்தில் மகளிரின் பங்களிப்பு இணைக்கப்பட்டு, அவர்களுக்கு வருவாயை ஈட்டித்தந்துள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

சந்திரயான்-3 திட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண் விஞ்ஞானிகளும், பொறியாளர்களும் பங்கேற்றுள்ளதை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

மகளிர் பயன்பெறும் வகையில் இலவச சமையல் எரிவாயு இணைப்பு, வங்கிக்கணக்குத் திட்டம், குடிநீர் வசதி, மின்சாரம், நவீன கழிப்பிட வசதி திட்டம் போன்றவைகளையும் மத்திய அரசு செயல்படுத்தி வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

பிரதமரின் வீட்டுவசதித் திட்டத்தில் 4 கோடிக்கும் மேற்பட்ட ஏழை, எளிய மக்களுக்கு உறுதியான கான்கிரீட் வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

குடும்ப தலைவியின் பெயரில் இத்திட்டத்தின்கீழ், அதிக வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

**<<<<<<>>>>>>**

இந்தியா – அமெரிக்கா இடையிலான இருதரப்பு உறவுகள் குறித்து அமெரிக்காவின் வெளியுறவுத்துறை துணை செயலர் திரு கிறிஸ்டோபர் லாண்டாவு உள்ளிட்ட தலைவர்களுடன், வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி பேச்சு நடத்தியுள்ளார்.

இருதலைவர்களும் தொழில்நுட்பம், வர்த்தகம் உள்ளிட்டத் துறைகளில் ஒத்துழைப்புக்கான முயற்சிகள் குறித்து வாஷிங்டனில் விவாதித்தனர்.

அமெரிக்க பாதுகாப்புத்த்துறையின் துணை செயலர் திரு **'Stev Feinberg '** –ஐ சந்தித்த திரு மிஸ்ரி, பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான முயற்சிகள் குறித்தும் விவாதித்தார்.

அமெரிக்க நிதித்துறை இணைச்செயலர் திரு மைக்கேல் **'Faulkender** –ஐ சந்தித்து பேசியபோது, பொருளாதார மற்றும் நிதித்துறை ஒத்துழைப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவது குறித்து விவாதித்தனர்.

**<<<<<<>>>>>>**

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது பாகிஸ்தானில் ஏற்பட்ட உயிரிழப்புக்கு தெரிவித்த இரங்கலை கொலம்பியா அதிகாரப்பூர்வமாக திரும்பப்பெற்றுள்ளது.

காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு சசிதரூர் தலைமையிலான குழுவினர் கொலம்பியாவில் வெளியுறவுத்துறை துணை அமைச்சர் **'Rosa Yolanda'**-வை சந்தித்து பேசியபோது ஆபரேஷன் சிந்தூரின் துல்லிய தாக்குதல் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையின்போது பாகிஸ்தானில் உள்ள அப்பாவி பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தீவிரவாதிகள் மற்றும் பாகிஸ்தான் ராணுவ அமைப்புகளை குறிவைத்தே துல்லிய தாக்குதல் நடத்தப்பட்டதாக ஆதாரங்களுடன் எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிலையில், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது பாகிஸ்தானில் பொதுமக்கள் உயிரிழந்ததாக கொலம்பியா இரங்கல் அறிக்கை வெளியிட்டது இந்தியாவுக்கு வருத்தத்தை ஏற்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, கொலம்பியா அரசு அந்த இரங்கல் அறிக்கையை அதிகாரப்பூர்வமாக திரும்பப்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, சிவசேனா கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் **Shrikant Eknath Shinde**, தமது **'Sierra Leonean** பயணத்தை இன்று நிறைவு செய்துள்ளார்.

திமுக மக்களவை உறுப்பினர் திருமதி கனிமொழி தலைமையிலான குழுவினர், **Latvia –** வில் இந்திய வம்சாவளியினரை சந்தித்து ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைகள் குறித்து எடுத்துக்கூறினர்.

**<<<<<<>>>>>>**

மூவர்ண கொடி ஏந்திய 25–ஆவது **‘Fit India ’** சிறப்பு சைக்கிள் பேரணியை நாளை மத்திய இளையோர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா புதுதில்லியில் தொடங்கிவைக்கிறார்.

இந்த பேரணியில் முக்கிய பிரபலங்கள் பங்கேற்க உள்ளனர்.

ஒலிம்பிக் பதக்கம் வென்ற யோகேஷ்வர் தத், சர்வதேச மல்யுத்த வீராங்கனை சரிதா மோர், பாலிவுட் நடிகர் ஷர்வாரி, முன்னாள் கிரிக்கெட் வீரர் சபா கரீம், உள்ளிட்டோர் மூவர்ண சைக்கிள் பேரணியில் பங்கேற்க உள்ளனர்.

இதுகுறித்து மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், உலக சைக்கிள் தினம் அடுத்த மாதம் 3–ஆம் தேதி கொண்டாட உள்ள நிலையில், நாளை நடைபெறவுள்ள மூவர்ண கொடி ஏந்திய சைக்கிள் பேரணி உடல் உறுதியில் சைக்கிள் பயிற்சியின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதோடு, முப்படையினரின் பங்களிப்புக்கு நன்றி செலுத்தும் வகையிலும் அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்து 200–க்கும் மேற்பட்டோர் இந்த சைக்கிள் பேரணியை நாளை தொடங்குகின்றனர்.

இந்த பேரணி நாட்டில் உள்ள 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களுக்கு செல்ல உள்ளது.

**‘Fit India ’** இயக்கத்தை மேலும் வலுப்பெறச் செய்யும் நோக்கில் தேசிய கொடி சைக்கிள் பேரணியாக நடத்தப்படுவதாகவும் மத்திய இளையோர் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>>**

ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை கொண்டாடும் வகையில், தமிழகத்தின் பல பகுதிகளில் மூவர்ண கொடி பேரணி இன்று நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம் அருகே ஆதமங்கலம் புதூரில் நடைபெற்ற பேரணியில், பிரதமர் திரு நரேந்திர மோடிக்கும், முப்படை வீரர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் பிஜேபி சார்பில் தேசியகொடி ஏந்திய ஊர்வலம் நடைபெற்றது.

இதில் பிரம்மோஸ் ஏவுகணை மாதிரியை ஏந்திச்சென்றது அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார் கோவிலில் ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை கொண்டாடும் வகையில் நடைபெற்ற மூவர்ண கொடி வெற்றிப் பேரணியில் பிஜேபி–யின் மாவட்ட அளவிலான நிர்வாகிகளும், அஇஅதிமுக நிர்வாகிகளும் கலந்துகொண்டனர்.

**<<<<<<>>>>>>**

வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கம் நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது.

இதனையொட்டி தமிழகத்தின் திண்டுக்கல்லில் நடைபெற்ற நிகழ்ச்சியில், விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பம் மற்றும் விதை வகைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக காந்தி கிராம கிராமிய பல்கலைக்கழகத்தின் வேளாண் அறிவியல் மையத்தின் விஞ்ஞானி திரு செந்தில்குமார் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

**<<<<<<>>>>>>**

மத்திய அரசின் இளையோர் விவகாரங்கள் துறையும், மருந்துகள் உற்பத்தி மற்றும் கட்டுப்பாட்டுத்துறையும் இணைந்து 15 நாள் மக்கள் மருந்தக அனுபவ பயிற்சித் திட்டத்தை நாளை தொடங்குகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஐந்து மக்கள் மருந்தகங்கள் தெரிவு செய்யப்பட்டு, ஐந்து தன்னார்வ இளைஞர்கள் பயிற்சிக்காக அனுப்பிவைக்கப்பட உள்ளனர்.

மக்கள் மருந்தகங்களின் அன்றாட நடவடிக்கைகளில் அவர்கள் பங்குபெற்று மருந்துகளை விற்பனை செய்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுவான மருந்துகள் குறித்த விவரங்களை தெரிந்துகொண்டு, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது, பொது சுகாதாரம் குறித்த தகவல்களை அளிப்பது போன்ற பணிகளில் அவர்கள் ஈடுபடுவார்கள்.

இளம் தன்னார்வலர்களை மக்கள் மருந்தகங்களில் இணைப்பதன்மூலம், அவற்றின் சேவைகள் மேம்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>>**

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் எட்டு தங்கம், 10 வெள்ளி, ஆறு வெண்கலம் என மொத்தம் 24 பதக்கங்களுடன் இந்தியா பதக்கப்பட்டியலில் இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது.

தென்கொரியாவில் நடைபெற்ற இப்போட்டியின் கடைசி நாளான இன்று இந்தியா 3 வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

-------------------

சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Kaliyanda Poonacha - Nedunchezhian** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

அமெரிக்காவில் இன்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 2-6, 6-2, 11-9 என்ற செட் கணக்கில், நியூசிலாந்தின் **Finn Reynolds – James Watt** இணையை வென்றது.

**<<<<<<END>>>>>>**